<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 2/2024 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | திருமதி.சாந்தி | | | |
| **Date** | **:** | **11.11.2025** | | | |
| **Time** | **:** | **2.39 p.m to 3.05 p.m** | | | |

<u>தொ.த.சா.**1.**திருமதி.சாந்தி என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் என்னுடைய பிரமாண வாக்குமூல சாட்சியம் பத்தி 16 ல் சொல்லி உள்ள விவரங்கள் உண்மைதான். அது சம்பந்தமாக நான் காவல் நிலையம் சென்று 06.01.2023 அன்று புகார் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் அந்த புகாரில் (தொ.சா.ஆ.3) மனிதவள அதிகாரி திருவேங்கடம் அவர்கள் கொலை மிரட்டல் விடுத்ததாக கண்டுள்ளதா என்றால் இல்லை. அந்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு எதுவும் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. நான் என்னுடைய சாட்சியத்தில் பேப்பரை கொடுங்கள் படித்து பார்த்து கையொப்பம் போடுகிறேன் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். தொ.சா.ஆ.**1** எனக்கு வழங்கப்பட்ட பணி நியமன ஆணை என்றால் ஆமாம். அதில் என்னுடைய மாத சம்பளம் மொத்தம் ரூ.11,000/- என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் கண்டுள்ள

கையொப்பம் என்னுடையது தான். நான் C-6 சிவம் நகர், பெரிய குப்பம், திருவள்ளூர் என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் கடிதம் நிர்வாக தரப்பில் இருந்து என் விலாசத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் இல்லை. அந்த கடிதம் 19.4.2023 அன்று என்னால் பெறப்பட்டிருக்கிறது என்றாலும் அதைப் பெற்றுக் கொண்டு அஞ்சல் ஒப்புதல் அட்டையில் நான் கையெழுத்து போட்டு உள்ளேன் என்றாலும் இல்லை. கம்பெனியில் மொத்தம் 1200 பேர் வேலை செய்கிறார்கள் என்றும் அதில் 80 சதவீதம் பேர் பெண்கள் என்றும் நான் சொல்லி இருக்கும்பொழுது என்னை போன்று வேறு யாராவது நீதிமன்றத்திலோ தொழிலாளர் ஆணையரிடமோ காவல் நிலையத்திலோ இது போன்று புகார் எதுவும் கொடுத்திருக்கிறார்களா என்றால் தெரியாது. நான் அம்பத்தூர் Clothing லிமிடெட்டில் வேலை பார்த்த காலகட்டத்தில் என்ன வேலை செய்தேனோ அதற்கான ஊதியம் தான் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். நான் அந்த வேலை செய்த போது ஒரு நாளைக்கு எத்தனை துணிகள் மொத்தமாக தைப்பேன் என்றால் முழு ஆடையாக தைக்க மாட்டோம் ஆடையின் சில பாகங்கள் மட்டும் தான் தைக்கக் கொடுப்பார்கள் அது போன்று இருபது முப்பது பாகங்கள் ஒரு மணி நேரத்தில் தைத்துக் கொடுப்பேன். என்னிடம் காட்டப்படும் On job training 12.04.2022 தேதியிட்டதில் கண்டுள்ளது என்னுடைய கையொப்பமா என்றால் இல்லை. நிர்வாகம் எனக்கு காப்பீடு

செய்து உள்ளதா என்றால் இல்லை. PF உள்ளது. நான் என்னுடைய மனுவில் வேலைக்கு சேர்ந்த முதல் மாதத்திலேயே நிர்வாகத்தில் தகாத வார்த்தைகளால் என்னை திட்டிய காரணத்தினால் வேலைக்கு போகாமல் வீட்டில் இருந்ததாகவும் HR அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வேலைக்கு வர சொன்னதன் பேரில் போனதாக சொல்லி உள்ளேன் என்றால் ஆமாம். அந்த சம்பவம் சம்பந்தமாக நான் யாரிடமாவது புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் மனதில் உள்ள புகைப்படம் என்னுடையதுதான் அதில் உள்ள கையொப்பமும் என்னுடையது தான் நான் தான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை கேட்டு விண்ணப்பித்திருந்தேன் என்றால் ஆமாம். அது நி.சா.ஆ. **2**. நான் வேலை கேட்டு விண்ணப்பித்த அன்றைய தினமே எனக்கு அறிமுக பயிற்சி வழங்கப்பட்டு அதற்கான உத்தரவு வழங்கப்பட்டது என்றால் ஆமாம் அந்த உத்தரவு என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம். ஆனால் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதா இல்லையா என சந்தேகமாக உள்ளது. ESI.5132619239 என்பது என்னுடைய காப்பீட்டு எண் என்றால் ஆமாம். அது நி.சா.ஆ.**3**. எதிர்மனுதாரர் நிர்வாகம் என்னை வேலைக்கு அழைக்கவில்லை என்றாலும் நான் அம்பத்தூர் Clothing லிமிடெட் கம்பெனியில் வேலை செய்த போது எவ்வளவு துணி தைத்துக்

கொடுகிறேனோ அதற்கான கூலியை மட்டும் வாங்கி வந்தேன் என்றாலும் ஆனால் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் எனக்கு மாத ஊதியம் கொடுக்கப்பட்டு வந்தது என்றாலும் இந்த நிலையில் நான் எனது வயது மூப்பின் காரணமாகவோ அல்லது தனிப்பட்ட காரணத்தினாலையே தான் நிர்வாகத்தில் வேலையை தொடரவில்லை என்றாலும் மாறாக நான் மனுவிலும் சாட்சியத்திலும் நிர்வாகத்திற்கு எதிராக சொல்லி உள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

S SUJATHA
Digitally signed by S SUJATHA
Date: 2025.11.11 18:13:41 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:11.11.2025.